# தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் / காவல்படைத் தலைவர் Times Now தொலைக்காட்சி நேர்காணல்!

சென்னை, ஜுன்.3-

தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர் / காவல் படைத் தலைவர் (DGP/HOPF) அவர்கள் 31 மே 2025 அன்று Times Now செய்தி சேனலுக்கு ஒரு நேர்காணல் வழங்கினார். இதில், தமிழ்நாடு காவல்துறையைச் சுற்றிய பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து பேசினார். அந்த நேர்காணலின் சாராம்சம் பின்வருமாறு:

1. கொலை மற்றும் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து,

பதில்: புள்ளிவிவரங்களைப் பார்க்கும் போது, இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை. 2019 முதல் 2024 வரையிலான காலக்கட்டத்தில், குறிப்பாக ரவுடி, பழிவாங்கும், சாதி மற்றும் சமூகவாத அடிப்படையிலான கொலைகள் கணிசமாக குறைந்துள்ளன. 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலும், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான கொலைகள் பதிவாகியுள்ளன.

2. பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான குற்றங்கள் அதிகரித்துள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து.

பதில்: புள்ளி விவரங்களின் படி, தமிழ்நாட்டில் குற்றச்சாட்டு விகிதம் நாட்டில் மிகவும் குறைவாகவே உள்ளது. சம்பவ எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம், ஆனால் அது விழிப்புணர்வின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது. 2023 இல் POCSO வழக்குகளில் நேரடி புகாரளிப்பு 88% இருந்தது, அது 2024 இல் 76% ஆகக் குறைந்துள்ளது. இதன் மூலம், மக்களிடையே விழிப்புணர்வு அதிகரித்திருப்பது தெளிவாகிறது. எனவே, இந்த விவகாரங்கள் சரியான சூழலில் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

3. உளவுத் துறையின் தோல்வி மற்றும் சில முக்கிய வழக்குகளில் அரசியல் தாக்கம் பற்றிய குற்றச் சாட்டுகள் குறித்து.

பதில்: இது முற்றிலும் தவறானது. சில கணிசமற்ற வழக்குகள் மட்டுமே மேற்கோளாக குறிப்பிடப்படுகின்றன என்பது, இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை இல்லை என்பதை காட்டுகிறது. ஒரு சில தனிப்பட்ட சம்பவங்களை உளவுத்துறை தோல்வியாகக் கூறுவதில் நியாயம் இல்லை. அதற்கு பதிலாக, அந்த வழக்குகளை காவல் துறை எவ்வாறு கையாள்கிறது என்பதை கவனிக்க வேண்டும். பல முக்கிய வழக்குகளில், காவல் துறையின் நேர்மையான நடவடிக்கையால் தீர்ப்புகள் கிடைத்துள்ளன.

4.POCSO, மயக்கமருந்துகள், புகையிலைபொருட்கள் குறித்து முன்னேற்பாடுகள்

பதில்: இவை குறித்து காவல்துறை பல முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. POCSO வழக்குகள் அதிகமாகப் பதிவாகி இருப்பதற்கு தமிழ்நாட்டில் விழிப்புணர்வு நடவடிக்கைகளே முக்கிய காரணமா கும்.

5. அண்ணாபல்கலைக்கழகம் மற்றும் அரக்கோணம் வழக்குகளில் அரசியல்தலையீடு குறித்த குற்றச் சாட்டு குறித்து.

பதில்:அண்ணா பல்கலைக்கழக வழக்கில், 5 மாதங்களில் தீர்ப்பு கிடைத்தது என்பது காவல் துறையின் விசாரணை மற்றும் வழக்கறிஞர் நடவடிக்கைகளுக்கு சான்றாகும். அரக்கோணம் வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது. இந்த வழக்குகளிலும், பிற வழக்குகளிலும் அரசியல் தலையீடு என்பது முற்றிலும் இல்லை. காவல் துறை இதுவரை 2 ஊடக அறிக்கைகள் மூலம் நடவடிக்கைகளை வெளிப்படையாக விளக்கியு ள்ளது.

6. போலி என்கவுண்டர்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து

பதில்: காவல்துறை சட்டப்படி, கடுமையான சூழ்நிலை யில்தான் தற்காப்பிற்காக வலியுறுத்தல் பயன்படுத்துகிறது. சிலசந்தேக நபர்கள் உயிருடன் உள்ளனர் என்பதே உண்மையை நிரூபிக்கிறது. நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் ஆணையங்கள் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளாக (ஆகஸ்ட் 2022 முதல் இன்று வரை) 22 மாதங்களுக்கும் மேலாக எந்த காவல் மரணங்களும் பதிவாகவில்லை இது ஒரு தேசிய சாதனையாகும்.

7. மயக்கப் பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்துவதில் சவால் குறித்த குற்றச் சாட்டுகள் குறித்து

பதில்: விநியோகத்தையும், தேவையையும் கட்டுப்படுத்தும் பணிகளில் காவல்துறையும், அரசும் மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மதிப்பீடு உயர்வது, மற்றும் போதைப் பொருட்களின் பயன்பாடு, பறிமுதல் அளவு குறைதல் ஆகியவை சாப்ளை கட்டுப்பாடு அடைந்திருப்பதை உறுதி செய்கின்றன.

8. கள்ளச்சாராய சம்பவங்கள் மற்றும் காவல்துறை தோல்வி குறித்த குற்றச் சாட்டுகள் பற்றி

பதில்: இரண்டு சம்பவங்கள் நடந்தது உண்மைதான். ஆனால் இரண்டும் மெத்தனாலால் ஏற்பட்டவையே. முக்கிய காரணம் - சாதாரண எத்தனோல்/RS பற்றாக் குறை. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கும் வகையில் நீடித்த மற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மெத்தனாலை ஒழுங்குப்படுத்தும் தனி அமைப்பின் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் தடுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9. பொதுமக்களுக்கு அறிவுரை

பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல், உண்மையைச் சரிபார்த்துonly உரிய ஆதாரங்களைப் பார்த்து முடிவுகளை எடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்கேடாக இருப்பதில்லை. இதற்கான அடையாளமாக - அடிக்கடி நடந்து கொண்டிருக்கும் பந்த், சாலைமறியல், இணைய சேவை முடக்கம் ஆகியவை எதுவும் தமிழ்நாட்டில் நடக்கவில்லை. எனவே, பொதுமக்கள் பொது வெளியில் வரும் தகவல்களைப் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும்.

## நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தினார்!

# செஸ் வீரர் குகேஷ் சிறப்புமிகு பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!



சென்னை, ஜூன் 3

நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்திய குகேஷ்க்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-


**நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை கிளாசிக்கல் பிரிவில் வீழ்த்தியமைக்காக குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்!**

**இந்திய செஸ்சுக்கு இது பெருமைமிகு தருணம், குகேஷ் அவர்களின் சிறப்புமிகு பயணத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்!**

**உலக செஸ் அரங்கில் இந்தியாவின் உறுதியான வளர்ச்சியில் இது மற்றுமொரு திடமான படி!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழோடு உன் புகழ் இருக்கும் !



ஏழு சுரங்கள்
அதிசயிக்கும்
இசைக்குரலே !

குறள் ஓவியம் எழுதிய
தொல்காப்பியப் பூங்கா விரலே !

கல்லறைக்குள்
தமிழ் கேட்கிறது
அலைகள்
சொல்கிறது !

உன் நினைவிடம்
நிலா அழகை
வெல்கிறது !

கலைஞர் சிலைகள்
பேருந்து நிலையம்
கலைஞர் நூலகம்
எங்கும் உன்
புகழ் மாட்சிகள் !

அனைத்துச் சாதியினரும்
அர்ச்சகர் முதல்
மாநில சுயாட்சி
தீர்ப்பு வரை
தலைவர்
மு.க.ஸ்டாலின்
வெற்றிக் காட்சிகள் !

மறக்க முடியுமா
கடிகார முள்ளாய்
தமிழரைச் சுற்றி வந்த உன்னை !

ஆணாகப் பிறந்ததால்
தாய்ப் பால் தரமுடியாது - ஆனால்
உன் மகன்தான்
எங்கள் அன்னை !

பெரியார் கைத்தடி
அறிஞர் அண்ணாவின்
எழுதுகோல்
இரண்டுமே
உன் செங்கோல் !

மண்ணிற்கு கீழே
வானத்திற்கு மேலே
உன் ஆற்றலின்
அளவுகோல் !

தொண்டர்விபத்தில் இறந்தால்
குடும்பத்திற்கு
பத்து இலட்சம்
தலைவர்
மு.க.ஸ்டாலின்
அறிவித்தார் !

தொண்டர்கள்
குடும்பத்தை
உன் மகன் போல
கலைஞர் அய்யா யார்
சிந்தித்தார் !

கலைஞரே
பசிக்கும்
எறும்புகளுக்கு
நீ-கரும்புக் காடு !

பகைக்கும்
நரிகளுக்கு
நீ -நெருப்பு வீடு !

நடிகர்களை
நட்சத்திரங்களாக
உயர்த்தியது-உன்
நாடக மேடை !

அடிமை முறையை நொறுக்கியது..
தமிழரை
உயர்த்தியது
உன் பேச்சு மேடை !

தலையெழுத்து
என்றவர்களின்
உயிரெழுத்தானவரே !

தமிழர்
உயர் வெழுத்துக்கு
ஒரே
கையெழுத்தானவரே !

கலைஞரே
காற்றோடு
உன் பெயர் இருக்கும் !

தமிழோடு
உன் புகழ் இருக்கும் !



**கவிஞர்**
**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

## எம்.கிருஷ்ணமூர்த்தி நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# சைதை மேற்கில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் 1002 பேருக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்!

சென்னை, ஜுன்.3-

பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ஏற்பாட்டில் சைதை மேற்கில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு ஜுன் 3 அன்று 1002 பேருக்கு அசைவ உணவினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஜுன் 3 அன்று 102 வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட்டில், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதைமா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடிஎல்லப்பன், ஆகியோர் முன்னிலையிலும், பகுதி துணை செயலாளர்கள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோர் வரவேற்பில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் 03.06.2025 (செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12 மணியளவில் 1002 பேருக்கு அசைவ உணவான சிக்கன் பிரியாணியை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்.

எனவே இந்நிகழ்விற்கு சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள், சை.மு.சேகர், அட்கோகமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வி.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம்.க.பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், எஸ்.பரத்குமார், எம்.அருண், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், எம்.சம்மந்தம், டி.தியாகு, கு.கார்த்திகேயன், மாவுமில்ஸ்ரீதர், கேபிள்காளி, தீ.ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், எம்.தீனதயாளன், அ.தமீம்அன்சாரி, வெ.புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், வெ.கிஷோர்குமார், துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஆர்.ஜி.ஸ்டா லின், எம்.ஜி.மதிவாணன், தமிழ்வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ்.ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில்மணி, ஆட்டோஜான், சார்புசரவணன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி.குமார், பூ.பாஸ்கர், த.ஜெயராமன், ஆர்.தனசேகரன், எஸ்.கோகுல்குமார், மாரியப்பன், விக்னேஷ், விவேக்செல்வம், ஆர்.துரைராஜ், ஜீவபிரபாக ரன், உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், அனைத்து அணிகளை சார்ந்த பகுதி துணை அமைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாககளப்பணியாளர்கள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள், உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள், பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.

## மேடவாக்கம் ஆர்.எஸ்.லோகேஷ்வரா நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மேடவாக்கம் ஊராட்சியில் கழக கொடியேற்றி 2000 பேருக்கு அறுசுவை உணவு!

### பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் ப.ரவி தலைமையேற்று வழங்குகிறார்!

சென்னை, ஜுன். 3

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி, புனித தோமையர் மலை ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மேடவாக்கம் ஆர்.எஸ்.லோகேஷ்வரா நிகழ்ச்சி ஏற்பாட்டில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் ப.ரவி தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (3.6.2025 செவ்வாய்க்கிழமை) செந்தமிழ் நகர் எச்.டி.போஸ், கே.ராஜேஷ் மேடவாக்கம் கிளை, வடக்கு பட்டு, ஆர்.வினோத்குமார், தாவூத் நகரில் எம்.ஆர்.ரமேஷ், கலைஞர் நகரில் டி.சேட்டு, ராமைய்யா நகரில் எஸ்.சுரேஷ், ரங்கநாதபுரத்தில் ரவி கேசவன், என்.மூர்த்தி, சாய்ராம் நகர் பூங்காவில் ஏ.வி.எம்.முருகன், காந்திநகரில் பழனி ஆகியோர் முன்னிலையில் அனைத்து பகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக, ஒன்றியக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

## த.மணி நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# 139வது வட்டத்தில் கலைஞர் பிறந்த நாள்: உணவு வழங்கல்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா.துரைராஜ் முன்னிலை!

சென்னை, ஜுன்.3-

மாவட்ட பிரதிநிதி த.மணி ஏற்பாட்டில் ஜுன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு 502 பேருக்கு உணவினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார். எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலை வகிக்கின்றனர்.

ஜுன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி 139வது வட்டத்தில் மாவட்ட பிரதிநிதி த.மணி ஏற்பாட்டில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன் ஆகியோர் முன்னிலையிலம், பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்டகழக செயலாளர்கள் அட்கோகமலநாதன் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, வட்ட கழக நிர்வாகிகள் மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ்.முருகன், சாந்திசுந்தரம், அயாத்பாஷா, அ.சுப்ரமணி, சி.டி.காசிநாதன், வி.சபரி, து.முரளி, எல்.சந்திரன் ஆகியோர் வரவேற்பில் ஜாபர்கான் பேட்டை, முத்துரங்கன் ப்ளாக் அருகில், 03.06.2025 (செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12 மணியளவில் 502 பேருக்கு பிரிஞ்சி உணவினை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார். இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, பொதுக்குழு உறுப்பினர், மின்னல் கந்தப்பன், மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன்,

கோ.பாஸ்கரன், இளை ஞர் அணி மாவட்ட துணைஅமைப்பாளர் ஆர்.கிருஷ்ண குமார், மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, பால்கார்ரவி, பொன் ஜெய்சிங், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் பிரபு, ம.சுகுமார், க. தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்தி ரளாக பங்கேற்க உள்ளனர்.

## தா.மோகன்குமார் தலைமையில் கலைஞர் பிறந்த நாள் விழா!

# 168 ‘அ’ வட்டத்தில் காலை உணவு!

### இரா.துரைராஜ் வழங்குகிறார்!

சென்னை, ஜுன்.3-

ஜுன்3, முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை கிழக்கு 168வது (அ) வட்டத்தில் தா.மோகன்குமார் எம்.சி., தலைமையில் 1002 பேருக்கு காலை சிற்றுண்டி உணவினை பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி., வழங்குகிறார்.

ஜுன்3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சைதை கிழக்குப் பகுதி 168வது (அ) வட்டத்தில் வட்ட செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான தா.மோகன்குமார் தலைமையில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், 168வது வட்ட கழக செயலாளர் நா.ராதாகிருஷ்ணன், பகுதி பொருளாளர் ஆர்.அருணகிரி, மாவட்ட பிரதிநிதிகள் ச.சேகர், டி.வி.நரசிம்மன், தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் ஆர்.டி.மூர்த்தி, முன்னாள் மாவட்ட பிரதிநிதி இரா.பால்ராஜ், வட்டகழக நிர்வாகிகள் த.பாண்டியன், இ.தனசேகரன், இ.சீனிவாசன், த.பாண்டியன், ஜி.என்.நாராயணன், மீனாபரமானந்தம், என்.மேகநாதன், ஜி.வெங்கடேசன், டி.மனோகரன், எம்.லிங்கேஷ்வரன், ஏ.என்.காளீஸ்வரன் ஆகியோர் வரவேற்பில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அறிவிப்பிற்கிணங்க கிண்டி அருளாயம் மன்பேட்டை கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனை அருகில் 03.06.2025 (செவ்வாய்க்கிழமை) காலை 8 மணியளவில் 1002 பேருக்கு காலை சிற்றுண்டி உணவினை சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், 13வது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ் வழங்குகிறார்.

மேலும் இந்நிகழ்வில் கொடிபாலா, கோ.தனசேகரன், க.வேல்முருகன், செட்டிதோட்டம் பி.செல்வம், ஜான் அகஸ்டின், ஜி.சி.ரவிராஜ், பி.ஆகாசம், எம்.குணா, என்.சிலம்பரசன், எஸ்.நாகவேல், ஆர்.ராஜேஷ், எம்.ராஜ்கண்ணு, மல்லிகா, ஜெபமாலை, எம்எஸ்எம்.ஷேக்தாவூத், எஸ்.பரமானந்தம், எஸ்.தாஸ், எல்.எலின்செல்வம், வி.சாமுவேல், ஏ.சரவணன், வஜ்ரவேல், பிரசன்னா, ஆர்.மோகன், எம்.தண்டபாணி, எஸ்.பகவதி, டி.இளையராஜா, பி.ராமச்சந்திரன், என்.தங்கராஜ், சி.ரமேஷ், கே.சிவாஜி, ப்ளம்பர்வேலு, வி.லட்சுமணன், பி.சதீஷ்ராஜ் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்க உள்ளனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு மற்றும் திருச்சி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 03.06.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 5.00 மணி | திருச்சி தெற்கு | தனரெத்தினம் மஹால், பழைய பால் பண்ணை அருகில், தஞ்சாவூர் பிரதான சாலை, திருச்சி. |
| 04.06.2025 புதன்கிழமை | காலை 9.30 மணி | திருச்சி வடக்கு | ஸ்ரீ தனலட்சுமி மணி மஹால், உளுந்தங்குடி பைபாஸ் சாலை பாலம் அருகில், மண்ணச்சநல்லூர், திருச்சி. |
| | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | கலைஞர் அறிவாலயம், கரூர் பைபாஸ் சாலை, திருச்சி. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி